பாஅஞ்சாலி பிள்ளை 632
(கேட்டுரா)

©

DIGITIZED

MBL,S
N10
116851

632

உ

சிவமயம்.

பிரமோத்திரகாண்டத்தில் ஒர்பாகமாகிய

சோமவாரவிரதமென்னும்

சீமந்தினிகல்யாண நாடகம்.

இஃது

சன்னிவிக்குப்பம் வாசிஞ்செட்டியாரால் இயற்றி

பட்டாபிராமையர் கொண்டு

கடலூர் ச. க. பாலசுந்தரப்பிள்ளையால் எழுதப்பட்டு

[illegible]

க. மு. பொன்னுசாமிப்பிள்ளையவர்கள்

கேட்டுக்கொண்டபடி,

திருப்பதி,

இரத்தினமுதலியார்

அண்டுஸன் அவர்களது

கல்வியானமுத்திராக்ஷரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1910.

(இதன் விலை அணா 6.)

(Registered Copy Right.)

O-,872MBL,S
N10

27. …
செப்பனிடுவதற்காக எடுத்துக்
கொள்ளப்பட்ட
… மாதம் 1982 வருடம்
செப்பனிட்டு முடித்த
… மாதம் 1983 வருடம்
ஆராய்ச்சி உதவியாளரின்
கையொப்பம். 27/1/83

REGISTERED
18 MAR 1910
MADRAS.

632
1-10

சிவமயம்

பிரமோத்திரகாண்டத்தில் ஓர்பாகமாகிய

சோமவாரவிரதமென்னும்

சீமந்தினிகல்யாண நாடகம்.

விருத்தம்.

சீர்கொண்டகயிலாய கிரியின்மேவுஞ்
சிவபெருமான்பதமடியேன் சிரமேற்கொண்டு
பேர்கொண்டசீமந்தினி சோமவாரம்
பெரும்புகழை நாடகமாய்ப்பேசுதற்கு
யேர்கொண்டசெங்கமல மார்பனை
மெழிலான மாயனிட மருகன்தானும்
கார்கொண்டமதகளிறத்தினமுகன்செல்வக்
கணபதியினிருபாதங் காப்புதானே.

விநாயகர் துதி.

பேர்விரிக்குந்தன்னிலேவரி முக்கனியமுதுகொண்டு
பார்தனைமேயன்பரமீது பரிவுடன்கிருபைகூர்ந்து

சேசமசயானவந்த்ரு கிலைத்தமைதக்கொடுப்பதற்கு
முசிலைமுன்றேறுபோர்நும் மகிழ்புலவோர்முன்பு
லாசுவன்புதல்வனுன மைவர்தும்பிக்கையிறேடே
நேசர்கள்மனதில்வாழும் நின்கணபதிக்கீதாமே.

விநாயகர்வருகிற தரு.

செல்வவிநாயகர் வந்தார் — மகாராமாக
செல்வவிநாயகர் — வந்தார்

செல்வவிநாயகர்வந்தார் — வல்லவையாளுடனே
சல்லரிமல்லரிதவில் — முரசதிர்வே (செல்வ)

முப்புரிமார்பிலாட — முத்திகந்தன்னிலேளி
யிப்புவியோர்துதிக்க — பெறிலாகச்சம்முன்பாக (செல்வ)

அண்டர்முனிவர்கள் — கமலபோனிக்கருமே
யெண்டிசை அதிபாதந் — [illegible]டகொலுக்கொளுமே (செல்வ)

யெங்கும்புகழ்பரவும் — மங்களப்புலவநல்லார்
தங்கியிருக்கும் — மந்திலகர்மவிநாயகர் (செல்வ)

கட்டியன் - நிபிதை.

பட்டிலர்ப்பணிகள்பூண்டு மகாகன்டிகையிலங்கத்
திட்டமாய்ச்சபையோர்மெச்ச சித்திரவர்மாசன்
இட்டியுமேவலெல்லா மின்பமாய்நடத்தவல்லக்
கட்டியக்காரன்வந்து களரியிற்தோன்றினனே.

கட்டியக்காரன் தரு.

கட்டியக்காரனிதோ — வந்தான்
ராசனிடகாவல்காரனிதோ — வந்தான்

கட்டியக்காரனும்வந்தான் — திடமாய்
செங்கோனும் — கொண்டு

யித்திடமாய் — சித்திரவர்ம
கிலையுடன் — துதிசெய்து (கட்டி)

வெட்டுகத்திவிருது — பாகைவிளங்குங்கவிக்கதுரை
வெட்டுருதுவட்டனையவிலச்சேர்ந்து [illegible] விரகுர்திகாரனுக்கு

தொப்பைதாடி முறுக்குமீசைகளுந் — [illegible]
தொந்தோமென்று — பெருந்தவோர்சிறந்[illegible]

முப்புருஷிகனாகிலேன்னுடனெப்புகிறார்களேயிப்புவிதனிலே
செப்பலாகுமோயென்று வல்லமையும்படி துரைசொற்படி

சித்திரவர்மாசபூபதியின் — ஆசாரவாசல்
வெத்தியுடன்காக்குஞ் — சேவகனே (கட்டி)

யெத்திசையோர்களுமென்னை — மெச்சியேபுகழ்ந்துபேசு
வுச்சிகாரிகைமிட்டுவிச்சித்திர — பாகையின்னதாவு (கட்டி)

கட்டியன் வசனம்.

அகோதெப்படி யென்றால் யிந்தப்பிரகாரமாக ஆரியதேசாதிபதியாகிய இராசாதி இராசனாகிய சித்திரவர்மமகாராசன் மந்திரிமார்கள் புடைசூழகொலுவுக்கு வருகிற விதங்காண்க.



சித்திரவர்மன் கவி.

சீர்புகழுமாரிய தேசத்தைபாருக்
இனகர்த்தன்குலத்துதித்த சித்திரவர்மன்
பார்புகழுமன்பதராகு தேசமன்னர்
பாவலர்தனிருபுறமும் பரிவாய்ச்சூழ
நீதிபெறவேசித்திமதிமந்திரிமார்கள்
செருக்கியிருபக்கமுமே நின்றுபோற்ற

வாதனையுமில்லாத ராஜாத்தியேந்த
மன்னவராமிப்போ சபைக்கிவருகின்றானே.

இராசன் தரு.

இராசனுஞ்சித்திரவர்ம இராசனுமியதேசன் [னே
ராசன்சபைக்குவந்தானே கொலுவந்தானுராஜன்சபைக்குவந்தா

தேசதேசத்துமன்னர் திறைகொண்டுவணங்கிட
மாசில்லாநீதிமதி மந்திரிகள்புடைசூழ (இராச)

விரசரிமன்னர்கள் விருதுகள்கூறிடவே
வரிசையாயானைசேனை வகையுடன்வீரிடவே (இராச)

கன்னியரிருபுறஞ் சவரிகள்வீசவே
கவிவாணர்புகழ்பாட கட்டியங்கூறிடவே (இராச)

ஆடையணிகள் பலவாடைகமகமென
நாடியேசபைதனில் நால்வகைசேனையுடன் (இராச)

இராசன் கவி.

மதிதனிலதிகமான மந்திரிமாரேகேளாய்
அதிபெருகமதுநாட்டிற் சுபேக்ஷமாய்மாதமும்மாரி
சதிருடன்பெய்துவிளைவுட் சனங்களொருகுறையில்லாமல்
நிதியுடனிருக்கின்றாரா நிலைமையையுரைத்திடாயே.

வ-ம். அதிகாவாரும் பின்னாய் நீதிமந்திரி மதிமந்திரி நமது பட்டணத்தில் மாதமும்மாரி பெய்து 84-லக்ஷம் ஜீவராசிகளும் ஒன்றுக்கொன்று குறைவில்லாமல் இன்னாள்வரையில் சுகமாகவாழ்ந்து வருகிறதோ சொல்லும் பின்னாய் மந்திரி மார்களே.

மந்திரி கவி.

மன்னர்மன்னவரேயிந்த மாநிலந்தன்னிலேதான்
மின்னிமேமழைபொழிந்து விளைவுகள்மிகுதியாகி
நன்னயமாகத்தானே நால்வகைச்சேனையோடு
பின்னையுஞ்சகலசீவன் பெருமையோடிருக்குதையா.

மந்திரி வ-ம். சரணஞ் சரணமையா சுவாமி நமது பட்டணத்தில்மாதமும்மாரி பொழிந்து பயிர்தழைத்து விளைவும்சனங்களுங்குறையின்றி வாழ்வதன்றியில் புலியும் பசுவும் ஒருதுறையில் நீர்குடிக்கவும் கீரியுஞ் சர்ப்பமும் கெடுதியில்லாம லுறவாடியும் பருந்

துமினியுமோர் கூண்டிலே வசிக்கவும் எலியும்பாம்பும் ஓர்வளையிலிருக்கவும் சிங்கமும் யானையும் சேர்ந்துறவாடவும் யிப்படியாசகலசீவராசிகளும் யாதொரு குறையில்லாமல் மகா செல்வீகத்துடன் வாழ்ந்திருக்.. துதையா மகாராசனே.

இராஜன் கவி.

சீர்பெருமாலயங்கள் சிறப்புடனறுகாலம்
பேர்பெரும்பூசையெல்லாம் பிசகாமல்பஞ்சபர்வ
தேர்முதல்திருவிழாக்கள் திருப்பணிவேலையெல்லாம்
நேர்பெறநடக்குஞ்சேதி நிமிஷத்திலுரைத்திடாயே.

வ-ம். கேளும்மந்திரி மார்களே நமது பட்டணத்திலுள்ள சிவாலயம் விஷ்ணுவாலயம் மற்றுமுள்ள தலமெல்லாம் ஆறுகாலபூசை யன்ன நைவேத்தியம் பஞ்சபர்வ காலபூசை தேர்திருவிழா முதலான சகிரியங்களில் யாதொருகுறை யில்லாமல் நடந்து வருகுதா சொல்லும் பின்னாய் மந்திரி மார்களே.

மந்திரி-திபிதை.

செங்கையில்வாளுமேந்தி தேசத்தையாளுமன்னு
மங்களமாகத்தானே மகாலிங்கமெல்லாம்பூசை
தங்களுத்தரப்படிக்குத் தடையின்றிநித்தநித்தம்
பொங்கமாய்நடக்குதையா பூபதியரசர்கோவே.

மந்திரி வ-ம். சரணஞ் சரணமையா சுவாமி மகாராசனே நம்பட்டணத்திலுள்ள ஆலயங்களெல்லாம் ஆறுகாலம்பூசை அன்னநைவேத்தியம் பஞ்சபர்வ காலபூசை தேர்த்திருவிழா முதலான சகிரியங்களெல்லாம் தங்களுத்தரப்படிக் குறையில்லாமல் நடந்துவருகுதையா மகாராசனே.

இராசன் கவி.

மந்திரிமாரேயெந்தன் மங்கையாள்வயத்திலேதான்
சுந்திரமானபுத்திரர் சுபமுடன்பிறந்திருக்க
செந்திருமகளைப்போலும் செல்வியொன்றில்லையென்று
சிந்தையும்வாடிநின்றேன் திறமதுசொல்வாய்மந்திரி.

வ-ம். ஆ-ஆ-யென்னது மந்திரிமார்களே யென்மனதிலோர் கவலையாயிருக்கின்றது அதுயாதெனில் யெனக்கு இளமைப்பொருந்திய ரூபகன்னிகைப்போலும் பராக்கிரமமுடையபுத்திர ரிருக்கச்செ

திருமகளைப்போல வொத்த புத்திரியானவள் இல்லையென்று மனம்வா டியிருக்கிறேன் இதற்கொரு விபரமாராய்ந்து சொல்லுமப்பா யென்று மந்திரி.

மந்திரி-கவி.

ஐயனேயரசே கேளும் மடிபவன்வரைத் தந்தைதன்னை
வையரவணிந்தயீசன் பாதமேபோற்றிசெய்து
தையலாள்வயத்திர்க்கெற்பத் தரிக்கவேயருள்பாலிப்பார்
பொய்யிலாதிதனைக்கொள்ளும் பூபதியாசர்கோவே.

வ-ம். கேளும் மகாராசனே யெங்கள் மனதிலொரு ஆலோசனையிருக்கின்றது அதாவது தெனில் சாக்ஷாத் பரமசிவத்தைநோக்கி தாங்கள் பத்தினியுடன் தவஞ்செய்வீரானால் பரமசிவன் கிருபையால் புத்திரபாக்கிய முண்டாகும் யிதைத்தாமதமில்லாமல் நடத்துமையா அவாம்.

இராசன்-கவி.

கதிபெருமதுவாசல் கட்டியக்காரா கேளாய்
பதிதனிலேகியெந்தன் பாரியாளாகுமந்த
மதிதனிலதிகமான மரகதவல்லிதன்னை
யதிதுரிதமாயிப்போ அழைத்துநீவருகுவாயே.

வ-ம். அடா வாடா கட்டியனே நமது அரண்மனைக்கேகியு அதேவியாகிய மரகதவல்லியை அதிசீக்கிரத்தில் நாமழைத்தோமென்று அழைத்துவாரும் சீக்கிரம் கட்டியனே.

கட்டியன்-வசனம்.

அப்படியே யிதோ அழைத்துவருகிறேன் மகாராசனே.

மரகதவல்லி-விருத்தம்.

அன்னம்போலனடையும்முகமுகம் நுதலொளியுமணிசெவிகளிலசைய
மின்னிடைமீதிலொட்டியானமும் மிளிர்ந்திடவிரிமலர்குழலிசையாட
கன்னியர்க்கரசிதன்னிடையுங் கொலுசங்காலினிற்கலகலவென்ன
மன்னவன்தேவிமரகதவல்லி மயிலெனுமாறுவந்தனளே.

மரகதவல்லி-தரு.

வாராளேதேவி மரகதவல்லி வாராளே
வாராளேதேவிநேராகவப் பல்லக்கிலேறி
சீராளசித்திரவர்மன் சிந்தைமகிழ்வதாக (வாரா)

முத்துச்சரங்களாட மோகனமாலைமின்ன
கத்திலுர்தாதிமார்கள் சூழ்ந்துபணிசெய்திட (வாரா)
தங்கச்சரிகைந் துகில் அழையஇடைதுவள
யெங்கும்பளபளவென்ன யின்பமாரச்சபைதன்னிலே (வாரா)

சந்தனப்பரிமள தந்தகளபம்வீச
செந்தாமரைப்பாதத்தில் சிலம்புகலகலவென்ன (வாரா)

காதில்கொந்தளவோலை சந்திரன்போல்விளங்க
மேதினியோர்துதிக்க மிகவுமுல்லாசமாக (வாரா)

முல்லைநகைதுலங்க சொல்லுங்கலைகலென்ன
நல்லமன்மதனிட வில்லோபுருவமென்ன (வாரா)

மரகதவல்லி-தரு.

சரணமையயனேசிரானேசதா சரணமையயனே
சரணமையயனேயெந்தன் கருணைலோலனே

சூரியதேசம்பரிபாலரும் நீரனேயித்த
பாரியர்கட்குஅடியாள் பாவையேன்வர (சா)

மன்னர்மன்னவர்கூழும் உன்னிதகொலுவில்
யென்னுகாரணம்பரலை ...யிம்விடல்நான்வர (சா)

தேசமெங்கிலும்புகழ் வீசும்நீநேசா
பாசமாகவேயிரு பாவையேன்வர (சா)

தினகரன்குலத்திறுதித்த ரவிரனே
யென்னையழைத்திட்டசேதி யுபாயருள்வீர்நாதா (சர)

மரகதவல்லி-கவி.

செங்கையில்வாருமேந்தி தேசத்தையிரண்டமன்னு
பங்கயவடிவமுள்ள பாதமுமடியாள்போற்றி
யிங்கிர்தசபைக்கிப்போது யெந்தனையழைத்தசேதி
மங்கையாளறியவிப்போ மன்னவாவுரைத்திடீரே.

வ-ம். சரணஞ் சரணமையா சுவாமியெனது பிராணநாயகரே அடியாளை இந்தராஜசபைக்கு அழைப்பித்தகாரிய மின்னதென்று தெரியும்படியாக யருள்செய்ய வேண்டுமையா சுவாமி.

இராசன்-கவி.

அன்னலனமயிலேமானே கற்பகக்கனியேதேனே
உன்னைநானழைத்தசேதி யுண்மையாயுரைப்பேன்கேளாய்
பொன்னின்மணியைப்போலும் புத்திரிவேண்டிநாமுஞ்
சென்னியிற்கங்கைசூடுஞ் சிவனடிவணங்குவோமே.

வ-ம். அகோகேளும் பெண்ணே பிராணநாயகி நானுன்னையழைத்தகாரணம் யேதென்றால் நமக்கு புத்திரியில்லாமல் யிருப்பது சரியல்ல யிப்போது நாமிருவருமாக புத்திரி வரம்வேண்டி ஸ்ரீகயிலாசபதியாகிய பரமசிவத்தை நோக்கி அரிதாகிய தவமபுரிவோம் வாரும்பெண்ணே பிராணநாயகி.

மரகதவல்லி-கந்தார்த்தம்.

பரிவுடன் தவம்புரிந்துப் பாவையைப்பெறுவோமென்று
யுரிதியாயுரைக்கவந்தீர் யுமையுடன்சிவனைக்காண
அரிதமாய்முடியாதென்று தோற்றுவடியாளுக்கு
அரிதானதவமுஞ்செய்ய நம்மாலாகுமோஅரசர்கோவே.

தரு.

ஆகுமோசுவாமி நம்மாலது வாகுமோசுவாமி
ஆகுமோநம்மாலே யரன் பாதங்கண்டிடப்
போகுமோபூபதி யரசேகேள் (ஆகுமோ)

வ-ம். கேளுமையா சுவாமி பிராணவல்லபா அரிதான தவஞ்செய்வதும் பரமசிவத்தைக் காண்பதும் யெளிதில் முடிவதன்று நாம் மால்முடியாதென்று நினைக்கின்றேனையா சுவாமிபிராணவல்லபா.

இராசன்-கந்தார்த்தம்.

பெண்ணேநீயெதிர்த்துவார்த்தை பேசலாகுமோ
தண்ணிருமதிபுனைந்தசங்கரர்பாதங்காண
யெண்ணிநானேன்முடியாதென்று யென்னிடன்பேசவந்தாய்
கண்ணேயெதிர்நிற்கவேண்டாம் கன்னியேபோடிபோடி.

தரு.

கன்னியேபோடியெதிருரைத்தா யன்னிதக்காரி
பன்னிபேய்யடித்தாலும் படுமூடாரிவாரோ
பின்னுமென்முன்வந்து பேசாதேசீச்சீச்சீபோ (கன்னி)

வ-ம். அடிபெண்ணே யிப்பூமியில் பத்தாவுக்கேத்தபதிவிரதை யென்பது யெதிருரைபேசாமையாம் யெப்படியெனில் கற்பெனப்படுவது சொற்பிறம்பாமை யென்பதுபோல சுரிதிஞானப்பண்ணிப்படித்தாலும் மூடாறியமாட்டார் அப்படியிருக்கவும் நீயென்வார்த்தையை மறுத்தாயல்லவா நல்லதாகட்டும் யினியென்முன்நிற்கவேண்டாம் யெட்டிப்போய் விடடிப்பெண்ணே.

மரகதவல்லி-கந்தார்த்தம்.

கன்னிநான்வார்த்தைக்காக கடுங்கோபம்வேண்டாஞ்சுவாமி
மன்னவர்பரமன்பாத மரிந்திடநம்மாலாமோ
அன்னவர்திருமால்தேடி யரியாததிவ்யபாதம் [சுவாமி
யென்னமாய்காண்போமென்று யெண்ணியான் யுரைத்தேன்

தரு.

யென்னடியாளுரைத்தேனதற்கு கோபம்பண்ணலாகுமல்லவே
பின்னைவேறொன்றுமே பேதையாளுரைத்திலேன்
முன்னேயில்லாதேயென்று மொழிவதுஞ்சரியாமோ (யென்னடி)

வ-ம். அகோகேளுமையா சுவாமி பிராணநாயகரே தேவரீர் வார்த்தைக்கு அடியாள் மறுத்துப்பேசவில்லை சாக்ஷாத்பரமசிவனுடையதிவ்ய பாதங்கண்டு வரம்பெற நம்மால் முடியாது மன்றியிரவும்விஷ்ணுவும் தேடிகாணாத திருவடியை நாம்காணமுடியாதென்று நினைத்தேன் ஐயா பிராணநாயகா.

இராசன்-கந்தார்த்தம்.

கடிபெய்யநான்பாதம் காம்காணமுடியாதென்று
போடியக்கெத்தன்முன்னே யுரைத்திடவேண்டாம்பெண்ணே

தேடியவடியாருக்குச் சின்ன டைமேயிருக்கு
வாடிநின்றுப்பாம்போக்கி வரப தருகுவாரே.

தரு.

வரமளிப்பாரேகிருபையுடன் — வரமளிப்பாரே
நெருமிற்கங்கையுந் — திங்களுஞ்சூடிய
அரவபரணனருள் — சுந்தடியார்க்கு (வரமளி)

வ-ம். கேளும்பெண்ணே பிராணநாயகியே நான் அரிதாகிய தவஞ்செய்து கயிலாயகிரியினுடைய திருவடிகாண முடியாதென்று நீயே யெனக்குவுபசாரஞ் சொல்லவேண்டாம் அன்பர்க்கிரங்கும் அருள்கடலாகிய சிவபெருமான் நல்வரமளிப்பாரடி பெண்ணே.

மரகதவல்லி-சுந்தார்த்தம்.

வையகந்தன்னையாளும் வாழ்வேந்தன்கோவை
கையினிற்பூமாலேந்து கடவுளைப்போற்றிசெய்ய
பொய்யிதுவென்றுதள்ளிப் போவேனோவடியாளிப்போ
ஐய்யனே தவத்திற்சேக யானுமேவருகின்றேனே.

தரு.

அதிசந்தோஷமானேனே — பிராணநாதா
அதிசந்தோஷமானே — அனைந்துபோற்றிடவே
மதிமுகவழகரே — வருகிறேனடியாளும் (அதிசந்)

வ-ம். அகோ சரணம் சரணமையா சுவாமி பிராணவல்லபா அடியாள் தெரியாமையால் சிவபூசைக்கிடருரைத்தேன் ஆனபடியால்பேதமையென்பது மாதர்க்கணிகலமென்ற வாசகப்படிமுதலான குற்றம்பொருத்தருளும் தேவரீருடைய திருவுளப்படிக்குதவஞ்செய்வோம் வாருமையா சுவாமி பிராணநாயகா.

சித்திரவர்மன் தரு.

நடப்போம்தவசுக்கு — நடப்போம்பெண்ணே
நடப்போம்தவசுக்கு — நாடியேயிருவரும்
விடைக்கொடியோன்பாத — மேவியே அறிந்திடவே (நட)
அத்தனையடியினை — யன்புடன்றுதிசெய்து
முத்திபெறவமது — பெற்றுமனமகிழ (நட)
மாயபிறவியோராம் — மனமகிழ்ந்தேயிருப்போம்
பூமலர்த்தூவியே — போற்றிநல்வரம்பெற (நட)

நம்முடையபத்தினிற் — நற்புதல்விபிறக்க
செம்மையாய்பரமனுக்த் — திருவடி துதிசெய (நட)

இராஜன் கவி.

பத்தினிமாளேநாமும் பரமனடியைக்காண
மெத்தநிமனக்கவலைவெகுண்டுரைசொன்னதெல்லாம
மித்தினம்பெருத்தே யின்பமாய்வழிநடந்து
இத்தமுக்தெளிவுண்டாக சீக்கிரம்வருகுவாயே.

வ-ம். வாரும்பெண்ணே பிராணநாயகி நீதெரியாத பேதமையாலுரைத்த குற்றம்பொருத்தேன் இனிதவத்திற் சேருவோம் வாரும் பெண்ணே.

இராசன் தரு.

ருப்பக்கிளியேதபஞ்செய்ய — மானகர்விட்டுவழிநடந்து
ருய்ப்பரமனின்பாதந்தேடி — தெரிசிப்போஞ்சிந்தையுடன்
ருய்பல்வனமும்பெண்ணே — பண்பாய்முனிவர்களாசிரமம்
பருணரிஷிகளெல்லாம்வாழும் — பெண்மயிலேபன்னகசாலையிதோ
க்காந்தியாகும்பிறர்க்கன்னிறு — யிருவரும்நீராடி
பாங்குடன் திருவெண்ணீரைப் பூசியேயீசனைப்போற்றிடுவோம்

பொது-வசனம்.

அகோ தெய்வம் யென்றால் யிந்தப் பிரகாரமாக சித்திரவர்மராசனும் அவன்தேவியுமாக பட்டணம் விட்டு சந்தனமரம் அசோகும்மரம் புன்னைமரம் யிப்படிப்பட்டமரம் நிறைந்த பூங்காவனத்திற்கெல்லைக்கொப்பான நதியில் ஸ்நானம்செய்து நீரணிந்துயிருவரும் ஒரேமனதாய் அரிதாகிய தவத்திற் நின்று தோத்திரஞ்செய்கின்றார்கள்.

இராசன்-மரகதவல்லி யிருவருமாக-துதி-தரு.

வதமுடியில்விளங்கும் — பராபரநாதா
சாதிப்பிரகாசமாய்தோற்றியே — யுல்கார்ளும்நீதா-கருள்
காகையபகனேநாகபூஷண — வர்குவீரியயோக அரகரா (வேத)
த்தினியாளுடன்சித்தமகிழ்ந்து — தேவாயிப்போ
த்தியாய்நீராடிதோத்திரஞ் — செய்கிறோம்வாவா (கருள்)
சார்விலாமவேவில்லிவிருதிட — பாற்பதியுடனேசேர்வைதந்திடும்
மனைதந்தியளிமேவைவிட — யாடிநின்றுய்யா-யிப்போ
ன்கைபுனமையுடன்யிந்த — வந்தருள்வீரையா (கருள்)
சங்கமாமகழநேமேந்திய பொங்கமாகவேகாத்திடும் (வே)

புத்திரியில்லா பெருஞ்சோக   முற்றனோசனகவாமி
சித்தமிரங்கித்திருவடி   தந்திடுங்கோனே (அருள்)
அத்தனேயுனையித்தியார்தொழு   வெத்தியாய்விடைமீதுவந்திடும்

இராசன்-தேவாரம்.

அத்தனேபோற்றிபோற்றி அல்முதுண்டாய்போற்றி
கற்றனேபோற்றிபோற்றி கங்கைவாழ்சடையாய்போற்றி
சித்தம்வைத்தடியேன்முன்புந் திருவடிதருவாய்போற்றி
முத்தனேபோற்றிபோற்றி மூவர்க்குமுதல்வாய்போற்றி

வ-ம். ஓம் அரகரா மகாதேவா கற்றனே கயிலாசவாசா ஓர்புத்திரியில்லாமல் மனம்வாடித் தவம்புரியு மெளியேன் முன்புயெழுந்தருளிவந்த கல்வை மருளுமையா சுவாமி கற்றனே.

சுவாமி-திபிதை.

ஈசனுமனமகிழ்ந்து யின்பமாய்தவம்புரிந்த
தேசதேசாதிமன்னன் இந்திரவர்மன்முன்பு
நேசமாயருள்பாலிக்க நீரணிந்தன்புகூர்ந்து
பாசமாய்விடையிலேறி பரமனும்வருகின்றாரே.

ஈஸ்வரன் தரு.

கயிலாசநாதர் வந்தார்   சிவகணம்புடைசூழவும்
மணமலர் வீசவும்   (கயிலா)

மயில்போலும்பார்வதி   வாமபாகத்தில்வர
வானவர்பூமலர்   வாரிவாரிச்சொரிய (கயிலா)

அரவபூஷணமாடவே ரம்பைமாதர்கள்   பரிவாய்ச்சவரிபாடவே
கரியுரியணிமின்ன கையில் கபாலமுமதிர   மிகுபெருகியகீரணியு

கண்டிகைமார்பிலிலங்கவே   திருசெவிகளுங் [மிலங்க
கதிரொளிபோல்   விளங்கவே

தொண்டுசெய்தன்பாகத்   தோத்திரம்செய்வோர்க்கு
பண்டுசெய்தவினையைப்   பரிந்தருள்தர (கயிலா)

கங்கையமர்ந்திருக்கவே   சடைமுடியிற்றிங்கள்விரைசொலிக்கவே
செங்கையில்சூல   கபாலமிலங்கவே
சங்குசேகண்டியின்சத்த   முழங்கிடவே (கயிலா)

இராசன்-அகவல்.

அரகராசிவனே அகிலலோகேசா
புரகராநித்தியபுண்ணியமூர்த்தி
காமனையெரித்தமுக்கண்ணாபோற்றி
யேமனையுதைத்தயெந்தையேபோற்றி
பாற்பதிபாகாபரமனேபோற்றி
நேர்பெறவென்முன்னின்றெழுந்தருள்
இத்தினந்தன்னிலின்பமாயடியேன்
பத்தியாயுன்னிருபாதமேபோற்றி.

வ-ம். ஓம்அரகரா மகாதேவா கயிலாசவாசாகற்றனேயேழைபங்காளமூர்த்தி தேவரீர்முன்னாளிலே பிரமாவும் விஷ்ணுவும் தேடிக்காண அருமையாகிய தேவரீர் எறும்பிலும் கடையேனுகிய நான்காணபூர்வத்தில் யென்னமாதவம் செய்தேனோ தெரியாது தேவரீருடையதிருவடி கமலங்களுக்கு அடியேன்வந்தனம் வந்தனமையா சுவாமி

சுவாமி-ஆசீர்வாதக்கவி.

தனந்தானியம்சம்புத்திரலாபம்சந்தானசம்பத்தும்
தீர்க்கமாயிருநீரஞ்சீவிசிரஞ்சீவி சுகிபவாசுகிபவா.

ஈசர்-கவி.

பத்தியாய்மனைவியோடும் பதம்பணிந்தன்பாய்நின்ற
இந்திரவர்மராஜந்தன் சிந்தையெல்லாந்தீர்க்க

யித்தினங்கிருபைகூர்ந்து வின்பமாய்வந்தோமப்பா
மெத்தவே தம்பூரிக்க விதமெனக்குரைத்திடாயே.

வ-ம். ஆகா வாருமப்பா சித்திரவர்மா யுன்னுடைய தவத்திற்குமெச்சி நாம் பிரசன்னமாயினோம் நீயென்னவேண்டி தவம்புரிந்தாய்சொல்லுமப்பா அன்பனே.

இராசன்-தேவாரம்.

அத்தனேபோற்றிபோற்றி அரகராசிவனேபோற்றி
சுத்தனேஞானரூபா தோன்றியேவந்தநாதா
சித்தமும்மகிழ்ந்தேனுந்தன் திருவடிகண்டபோதே
பத்தினிவயத்திற்பாலன் பரிவுடனுதிப்பாய்போற்றி

வ-ம். அகோசரணஞ் சரணமையா சுவாமி பரமசிவமேபிரம்மும் விஷ்ணுவுந்தேடிக்காணாத் திவ்யபாதத்தை யடியேன்வெளிதிர்க்காணவென்னபாக்கியம் பெற்றேனோ தெரியாது தேவரீரெங்களுக்குவொருபுத்திரி யுண்டாகவருளிச் செய்யவேண்டுமையா கற்றனே.

ஈஸ்பரர்-திபிதை.

அப்பனேஉன்றனக்கு அதிசந்தோஷமானேன்
தப்பிதமில்லையுந்தன் றையலாள்வயத்தில்புத்திரி
யிப்பவேயருள்பாலித்தோம் யிமைப்பொழுதிசகடைாது
செப்பினேனும்புதல்வியர்க்கும் சிந்தையும்மகிழ்வாயப்பா.

வ-ம். அகோவாருமப்பா சித்திரவர்மா உன்னுடையவன்புக்கிரங்கியுன்பத்தினிவயத்தில் புத்திரியுண்டாக அருள் பாலித்தோம்நீயினியுன் யெதாஸ்தானம் போய்வாருமப்பா ஆசீன.

பொது-வசனம்.

இவ்விதமாக சித்திரவர்மராசனுந் தேவியாரும் வரம்பெற்றுப்பட்டணம்வந்து ராச்சியமாண்டு யிருக்கின்ற காலத்தில் மரகதவல்லியாளுக்கு 10-மீ சென்று கெற்பவேதனையுறுகிற விதங்காண்க.

மரகதவல்லி-கவி.

தாதியேசொல்லக்கேளாய் சசமாதகெற்பமானேன்
வாதையுமெந்தனுக்கு வலியதுதாளவில்லை
பேதையாளென்றுசெய்வேன் பெருமூச்சுமிளப்புமாக
பேதைபசனுரைப்பேனையோ வென்றுயிர்தானிலங்கா.

வ-ம். அகோகேளுமம்மா தாதிமார்களே யெனக்கானால் பத்துமாதமிகற்பமாய் விட்டது யிப்போ பிரசவகாலமானபடியால்மிகுந்தவாதனையானும்பொறுக்கக்கூடவில்லையேதமையாலேயெனக்குயாதொன்றுந்தெரியாது பெருமூச்சுமிளைப்புமாக யிருக்கின்றதுமெயன்னுயிர்பிரிந்துபோமோ வென்னமோ நானென்னசெய்வேன்டி யம்மா தாதிமார்களே.

மரகதவல்லி-தரு.

வந்திதியேதானென்ன செய்வேன்வயிறுவலிக்குதடி
மைந்தனைபெற்றெடுக்க நெஞ்சமுருகுதடி
அங்கமெல்லாமெங்கெங்கும் கடுக்குதடியென்னம்மா
ஆயிரந்தேள்கொட்டினதுபோல் காயந்துடிக்குதடி
மார்புமுழுதுமெத்த விருத்தமுங்கொள்ளுதடி
மங்கையரேயிப்போதெந்தன் அங்கமுருகுதடி
அசதிமயக்கையாலேயென் அங்கமும்நோகுதடி
அன்னமேகேளின்னேரம் ஆயாசமாகுதடி
அதிகவருத்தமாக அங்குமும் பாரிக்குதே
யார்க்குந்தெரியாதிடைகள் பார்க்கவும்பூரிக்குதே
பருத்திப்பட்டாடையெல்லாம் பலவேறுகண்ணோயிக்க
பாலனைப்பெறவருத்தம்மேது முன்னடேசொல்லும்பெண்ணே

வ-ம். அகோகேளுமம்மா தாதிமார்களே யெனக்கானால் வலிபொறுக்கக்கூடவில்லை யிந்தப்பட்டணத்தி லிருக்கின்ற மருத்துவமாதை அழைத்துவாருங்கடி தாதிமார்களே.

மருத்துவக்கிழவி கவி.

பிரித்திடுங்கோறப்பல்லும் பிளையுங்கோட்டுவாயும்
கரித்துணிசுத்திக்கொண்டு கையிலேகோலுமுன்றி
விரித்திடுந்தலையினோடு மெல்லியாள்முன்பதாக
மருத்துவக்கிழவிதானும் வந்துமுன்தோன்றினாளே.

மருத்துவக்கிழவி தரு.

நரைத்ததலையுமதிங்கலாதிம் நாலாம்பிறைபோலமுதுக்கூனும்
மருத்துவச்சிதோன்றினாள்
மருத்துவத்திறமையாசார
தாதுபார்த்துமுகக்குறிதனை நாடிப்பார்த்துவசனமுரைக்கும்
மாதுதான்மரகதவல்லிமுன்பு மருத்துவச்சியுந்தோன்றினாள்

மருத்துவச்சி-வசனம்.

அடியென்டிபாட்டியேன்டியம்மா யென்னைக்கூப்பிட்டே

மரகதவல்லி-வசனம்.

எனக்காளுல் செய்பவாதனை பொருக்கக்கூடவில்லை அதற்கு போதாவது ஒருபரிகாரஞ் செய்வாடியம்மா.

மருந்துவதி-தரு.

காயங்கடைத்திலவு	வாங்கிவாடியம்மா
கடுகுரோகணிகொஞ்சம்	வாங்கிவாடி
திப்பிலிசுக்குமிளகு	வாங்கிவாடியம்மா
சீரகமும்	வாங்கிவாடி
கோஷ்டம்கொடிமுளகு	வாங்கிவாடியம்மா
குங்குமப்பூகஸ்தூரி	வாங்கிவாடியம்மா
அதிமதுரம்அக்கிரகாரம்	வாங்கிவாடியம்மா
அன்னமேமகதமுட	னருவைபெருவாயே

மரகதவல்லி-அகவல்.

கணவருந்தேவியுங் கலந்துயிருக்கையில்
குணமுடனாதங் கூடியவித்துவும்
அருகுநுனியிலரும் பனித்துளிபோல
புரையவேபிறுணனுடன் வளர்ந்தருள
ஓராமாதம் உதிரம்திரண்டு
ஈருமாதம் மென்இடையதுதளர்ந்து
மூன்றுமாதம் முத்துபோலுருவாய்
நான்காமாதம் நாச்சிரத்துடனே
தோன்அஞ்சுல முதருதோல்நரம்பிருக்க
அஞ்சாமாதம் அரிவதுபுகுந்து
மிஞ்சியஆமைபோல மெய்களுமுண்டாய்
துன்றியரோமம் துவாரமுண்டதாய்
நின்றீர்பாலகரே நேர்மையதாக
ஆறாமாதம் அணிவிரலங்களும்
மாறுவிழியும் வாசலொன்பதும்
ஏழாமாதம் யெழுவத்தோராயிர
சூழுமின்னெடியும் துலங்குமாதாமம
அன்பத்தோராக்ஷரம் அதியுமாக
இன்பமாய்நின்ற இயல்பஞ்செழுத்துடன்
எட்டாமாதம் மியன்றபாலகருக்கு
யெட்டியே ரோமமுட்னேதிமிர்ந்து

ஒன்பதாமாதம் உக்கிரமடைந்திட
அன்புடன்சிவனே அருளினாலளித்து
அவ்வெனிபகாதலிக்கவேயிருந்து
நலமுடன்பத்தா மாதமதனில்
பத்தினித்தனதுமென் பதியுந்திட
வித்தகபன்னை மேருவிற்குந்தாம்
தலையதுகீழாய் தளையதுமேலாய்
அலகிலாவருத்தம் அருகவையாள் தனக்கு
மேவிடவுலாவாய் மெய்களும்நொந்திட
பாலனைப்பெருவது பரமர்கற்பனையே

வ-ம். இந்தப் பிரகாரமாக பத்துமாசமுங் கழித்த பின்பு மரகதவல்லியானவள் சிவனருள்படிக்கி பெண்குழந்தை பிரசவமாகிறவி தங்காண்க.

பெண்பிள்ளைபிறந்த-தரு.

பெண்பிள்ளைபிறந்தது
வள்ளிக்கொடியைப்போலும்
கல்லுதென்றுமணிபோலே
மரகதவல்லியாருக்கு (பெண்)

காலசைத்துகையசைத்து
கோலமுலைப்பாலுண்ண
கண்ணிமிட்டிவாய்திறந்து
கூவாகூவாவென்று (பெண்)

கொஞ்சிக்குளிப்பாட்டி
வஞ்சிமரகதவல்லி
கோதாட்டிசீராட்டி
வைத்திற் (பெண்)

நல்லபிள்ளையிதுவென்று
யெல்லவருங்கொண்டாடியே
நாயகிமார்தாமெடுத்து
யெடுத்தணைத்துமுத்தமிட ()

வ-ம். இந்தப்பிரகாரமாக மரகதவல்லியும் தனதுபக்கிரியைச் சீராட்டி பாராட்டித்தாலாட்டு சொல்லுகிற விதங்காண்க.

மரகதவல்லி-கந்தார்த்தம்.

பனிநீர்ச்சொரிந்து ஸ்தானபாரமங்கை, பரையின்ற புவிநிலெ ளிதாய், தனேதலைவாடிநின்றுகளைக்கும் பயிர்க்குமழைபோல், பிணி வேரிலாத வெளிமீதிருந்து யெதிரே பிரஸ்விருகான், கனிபோது மிங்குகனைமீது வந்துயென் கண்ணெதிரே.

தரு.

கண்ணேநீமுத்தந்தருவாய் கண்மணியேயென் (கண்)
கண்ணேமுத்தந்தருவாய் யென் னுள்ளமனங்குளிர
விண்ணோர்பணியுமெங்கள் அண்ணல்அருளால்வந்த (கருள்)
கற்பகமேதவமெய்ப்பொருளே நல்லர்ப்புத
மெய்யருள்சற்புதல்வர் மகிழ (கண்)

பொது-வசனம்.

இந்தப் பிரகாரமாக தாதிகள்மரகதவல்லி திருவயத்தில்பெண் குழந்தைபிறந்ததென்று சித்திரவர்மன் கொலுமண்டபம் வந்து மந் திரியுடன் சொல்லுகிற விருங்காண்க.

இராஜன் கவி.

மந்திரிமாரேயெந்தன் மங்கையாள்திருவயத்தில்
சுந்தரமானபுத்திரி சுபமுடன்பிறக்கயெந்தன்
சிந்தையுமகிழ்ந்தேனிப்போ திரவியமெடுத்துநீங்கள்
சந்தோஷமுடனேயன்பாய் தானதர்மஞ்செய்வீரே.

வ-ம். ஆ கா வாருமப்பா மந்திரிமார்களே நம்மிடசெல்வமாகி யபுத்திரி பிறந்தபடியால் நீங்கள்போய் திரவியமெடுத்து ஆலயதர மும்அதிதிகளுக்கு தானமுஞ்செய்து வாரும் மந்திரி.

மந்திரி-வசனம்.

கேளுமையா-ராசாதி ராசனே தாங்களுத்தாரப் படிக்கு பொ க்கிஷத்தி லுள்ளபசும் பொன்களை யெடுத்து அதிதிகட்கு அன்பு டன் தானதர்மஞ்செய்து வந்தோமையா சுவாமி.

பொது-வசனம்.

இவ்விதமாய் சித்திரவர்மராசன் புத்திரிக்கு வோர்சுபதினத்தி ல்சிமந்தினியென் அப் பெயரிட்டு தொட்டிலிட்டுவளர்த்து மந்திரியோ டுசொல்கிறார்.

இராசன் கவி.

விந்தைசேர்மதுநீதி விதிமுறைபிசகிடாத
மந்திரிமாரேநீங்கள் மானகரெங்கும்பார்த்து
சிந்தையுமகிழவந்த செல்விசாதகநூலாராய
சுந்தரப்புலவனான சோதிடன்தனையழைப்பீராய்.

வ-ம். ஆ ஆ வாருமப்பா மந்திரிமார்களே நீங்கள் இப்பூமியில் எல்லாதேசமும் பார்த்துமிகவும் தேர்ந்த சாஸ்திர நிபுணனாகிய சோதிடனைப்பார்த்து யழைத்து வாருமப்பா மந்திரி.

சோதிடர்-கவி.

சாஸ்திரங்கணிதங்கற்ற சதுர்மறையோர்கள்தானும்
கீர்த்தியாய்வேதத்தோடு திருபனின்றிகம்காடி
போற்றியேசாஸ்திரக்கட்டும் பூணூலும்மார்பிலங்க
பார்த்திபன்சித்திரவர்மன் பகர்கொலுதனில்வந்தாரே.

சோதிடர்-தரு.

சோதிடசாஸ்திரிகள்வந்தார் சபையிலேதோ
சோதிடர்சாஸ்திரிகள் வந்தார்
சோதிடசாஸ்திரிவந்தார் துலங்குங்கதிரவன்போல
சேதியென்னவென்றறிய சித்திரவர்மன்சபையிற் (சோ)
வாதியில்மிகுத்தவர் மறைகளுந்தெரிந்தவர்
சாதிப்பிராமணர் சாஸ்திரப்பண்டிதர் (சோ)
புலகிலுள்ளோர்க்கு உத்தமசொல்லவும்
உரவுபகைநீச்சம்முச்ச மாகூறியறிந்த (சோ)
சித்திரவர்மன்புத்திரிக்குச் செப்பாய்க்குருப்பெழுதும்
பத்தியுள்ளவேதசாஸ்த்திரப் பண்டிதர்வந்தார் (சோ)

இராசன்-வசனம்.

ஆ கா வாருமையா வேதியரே யிந்த ஆசனத்தி லெழுந்தருளு ம்உமது பாதாரவிந்தத்திற்கு வந்தனம் வந்தனமையா சுவாமி.

பிராமணன்-வசனம்.

மகாராசனும் தீர்க்காயுசு பெற்று சுகமாயிருப்பாய் எழுந்திரு மகாராசனே.

சித்திரவர்மராசன்-கவி.

ஆதவனெனிலிருந்த அருமறையோரேயுங்கள்
பாதமும்போற்றிச்செய்தேன் பக்தியுமிகவேபெற்றேன்
மாதமுந்திருநக்ஷத்திர வாரமுங்கர்ணம்லக்குணம்
பேதமேயாராய்ந்தென் புத்திரிக்குரைசெய்வீரே.

வ-ம். ஆ ஆ வாருமையா சுவாமி மறையோர்களே தேவரீரு டையபாதாரவிந்தங்களைக்கண்டு அடியேன்யினியில்லாதஆனந்தம டைந்தேன் சிவனருளால் யெனக்குகிடைத்த செல்வப்புத்திரிக்குசா தகமுலாராய்ந்து மாசம்வாரம் திதிநக்ஷத்திரம் காரணம் லக்குண ம்யோகம் யிதுகளெல்லாம் விபரமாக சொல்ல வேண்டுமையா சுவாமி.

பிராமணர் தரு.

பார்த்துரைத்தேனே பஞ்சாங்கத்தைப்
பார்த்துரைத்தேனே (பார்த்)
வேருநேர்த்தியாகவே சாஸ்திரிமாருஞ்
சதுர்மறை நூல்களும் (பார்)
லக்கிநெயதிநல்லுச்சம் கேந்திரம்நற்குரு
பார்த்திட்டாரட்டமத் தானத்தைப் (பார்)
அஷ்டலெக்ஷிமிகள் வாசமதாகியே
மாயிகவிர்த்தியா யிருந்திடும் (பார்)
சத்துமாதிபதிதானுச்சமும்பெற ஸ்தையலும்
மங்கிலியத்துடன்தாணிதனில் வாழ்வாள் (பார்)

17 18 MAR 1910 MADRAS.

பிராமணன்-வசனம்.

ஆ ஆ வாரும் மகாராசனே யுன்னுடைய புத்திரிசாதகமான அ ன்றாகயிருக்கின்றது ஆகிலும் திருமணத்தினுமையவ ளைப்போலும்சந்ததிக்கு அதிதிபோலும் அழகில் தமயந்திபோலவும் குணத்தில் திருமகள்போலவும் கற்பினில் சீதாதேவிபோலும் கலைக ளுக்குசரஸ்வதிபோலும் நடையிலன்னம் போலும் யென்றும்ஆயிசு விர்த்தியாகவுமிருப்பாள் ஆகிலும் கணவனுடன் கூடிபதினுபிரவரு ஷம்சுபமங்கிலியமுடன் வாழ்ந்திருப்பாள் யெனக்கு சிலவுதந்திடும் மகாராசனே.

பொது-வசனம்.

இந்தப் பிரகாரமாக சாதகப்பொருத்த மெல்லாம் வட்சிவி ருந்துவந்த மறையவன் சொல்லிவிட்டுப்போன பிற்குதென்தேசத்தி லிருந்து வந்தபிராமணன் சொல்லுகிற விதங்காண்க.

தென்தேசத்து பிராமணன் கவி.

இருவருமாகவந்த யெந்தனைக்கேளாமல்த்தான்
யொருவனேபலன்கள்சொல்ல வுன்மனங்களித்ததென்ன
பருவமாம்வயதீரேழிற் பைங்கொடிகைம்பெண்டாவரள்
இருவருளிதுவேயாகும் சித்திரவர்மபூபா.

வ-ம். ஆ ஆ வாருமப்பா அரசனே யுன்புத்திரியை யானறிந்து கொண்டேன் இரண்டுசாஸ்திரிகள் வந்தோம் யிருவரையுங் கலந்து பலன்கேட்டு வெகுமதி செய்யாமல் அவன்சொல்லிப்போன அபத் தவார்த்தைகளைக்கேட்டு மனமகிழ்ந்து செம்பொன்னளித்து அனு ப்பிவுயல்லவா நல்லநல்லவன் நீயொருவனைவிட்டு ஒருவனைக்கேட் டபோதேஅவன்புளுகப்பயப்படாமல் மூட்டைமூட்டையாகச்சொ ல்லிவிட்டான் யுன்புத்திரி ஈரேழுபதினாலாம் வயதில் மங்கிலியமிழ ந்துவிடும் யிதுதான்சரியானபலன் நான்போய் வருகிறேன் மகா ராசனே.

பொது-வசனம்.

இவ்விதமாகச் சோசியன் சொல்லிய வார்த்தையைக்கேட்டும காராஜன் சொல்லுகிற விதங்காண்க,

இராஜன் கவி.

யென்விடவயற்றில்நீயும் யிளம்திங்கள்போலுதித்து இக்கெதிவ ந்ததேவம்மா,யுன்னுடகோலம்பார்த்து நான்மகிழ்ந்துபுல்குவோர்

யாவருமடிக்க, பின்னமிலாமல்மங்கிலியந் தரித்துபெருமையாய் ராவிட்டால், மன்னவ்குறி வாழ்வதிர்ப்பயனும் வருவது மில்லை யைய்யோ.

இராசன்தரு புலம்பல்.

யென்னசெய்வேன் யேதுசெய்குவேன் ஓமகாதேவா
யெந்தன்புதல்விக் கிவ்விதிவசவும்
வன்னிகுலமான் மாழவேந்திடும்மகாதேவா
வர்மமோயிது நின்மலேசனே
பத்துநாலாண்டிற் பருவகாலத்தில்மகாதேவா
நிவினைத்தவிர்த் தாளுமையனே
நத்தியுமதுபாதங் கோரியே ஓமகாதேவா
நல்வரம்பெற்ற செல்வியாளுமே
சிந்தைகலங்கி வாடிடாமலேஓமகாதேவா
சிந்தைவைத்திடும் சந்திரசேகரா
தாளாவிரதம் தப்பியிருந்தோமேஓமகாதேவா
தையால்மனம் தையவைத்தயே
தோள்வலிகுத்தவீர மொடுங்கவேஓமகாதேவா
துன்பமடையபுத்திரி தந்தயோ
யென்னகுறைகள் முன்னாள்செய்தேனோஓமகாதேவா
யிந்தசென்மத்தில் துன்பப்பட்டயென்னசெய்வேன்

இராசன்-வசனம்.

ஐயோ தெய்வமே யான் அரிதாகிய தவம்செய்து பெற்றவெ ன்புத்திரி பதினாலாம் வயதிர் மங்கிலியமிழக்கவும் அதைநான் கண் ணினால்பார்த்து யெவ்விதமாக யிருப்பேன் இதற்குயானென்ன செ ய்குவோமடி பெண்ணே.

மரகதவல்லி-திபிதை.

ஐயனேசிவனேயுந்தன் அடியவன்மனதுநொந்து
நையவோவரமளித்திர் நானிதற்கென்னசெய்வேன்
பையரவணிந்தயீசா பரமனேயடியாரீன்ற
தையலாள்கைம்பெண்டாகத் தருமமோபரமநாதா

மரகதவல்லி-புலம்பல் தரு.

ஐயோநானென்னசெய்வேன் அதிசிவநளித்த
அருமைப்புதல்வியர்க்கு ஓதெய்வமே

வையகமறிந்திட்ட சோதிடப்பண்டிதர்
மாலைப்போமென்றுரைத்தார் ஓதெய்வமே
கையுங்கரமாகுமிங்கி மெய்யுஞ்சோருதே
இந்தகண்காகூசிகண்டிடவோ ஓதெய்வமே
மைவிழியாருடனொன் மன்னவருங்கூடி
வரம்பெற்றபுத்திரிக்கு ஓதெய்வமே
பையரவெடுத்தாடும் படத்தினிடிவிழுந்தப்
பான்மைபோலுரைத்தாரே தெய்வமே
வையகந்தன்னிலே வாழ்வதைப்பார்க்கிலும்
வுாணுலமாய்த்திடுவேன் ஓதெய்வமே

வ-ம். ஓம் அரகரா மகாதேவா கர்த்தனே காளகண்டதிருநேத் திரசுவாமி அடியாளும் யென்நாயகரும்யுமதுபாதங்கண்டு தங்களு டையதிருவாக்கின் படிக்கு கிடைத்த யென்புத்திரி பதினாலாம்வ யதில் மங்கிலியமிழக்கவும் விதிவசமோயிதைப்பார்த்து நாங்களெ ப்படி உயிர்தரித்திருப்போம்கர்த்தனே.

மந்திரி-திபிதை.

யெந்தனையாளுமன்னாயினையடிபோற்றிபோற்றி
சுந்தரப்புலவனான சோதிடன்வார்த்தைகேட்டு
சிந்தையும்வாடிநீங்கள் திகைப்பதுமழகிதல்ல
புந்தியைதெளியச்செய்யும் பூபதியாசேயம்மா,

வ-ம். ஆகோ சரணஞ் சரணம் மெனது தாய்தந்தைக் கொப் பாகிய அரசே தாங்களிருவருமொரு சோதிடன் வார்த்தையைக் கேட்டு யிப்படிக்கு அந்தப்படலாமோ தாங்களிருவரு மனந்தெளி ந்தரண்மனைக்குப் போயிரும் யாதொரு குறையும் வராது [illegible] தானே.

பொது-வசனம்.

இந்தப் பிரகாரமாக மந்திரிமார் சொன்ன வார்த்தையைக்கே ட்டு சித்திரவர்மன் மனம்தெளியாமல் அரண்மனையி லிருக்கும்போ து அந்த சமாச்சாரமானது தாதியரால் கேள்விப்பட்டு சீமந்தினி [illegible] [illegible] தந்தையைக்காணும் படிக்கு வருகிற விதங்காண்க.

சீமந்தினி-கவி.

சந்திரவதனியாளுந் தன்னைகளரமாட
சுந்தராதியோடு தோகையுஞ்சிவிகையேறி
விந்தைசேருதியாளும் வேந்தனுந்தந்தைமுன்பு
செந்தமிழ்தனக்கொப்பான சீமந்தினிவந்தாளே.

சிமந்தினி தரு

மதிமுகனைக் கண்ட்தாள் — அழிசெய அன்னவோ டு(ம்)
மாதுசீமந்தினி வந்தாள் — ஐயமாமகா து (மா து)

ஆதிசுந்தர ருபிகதிசொகளி — போலவே மாது
வதனக் கனகமென்ன — மதனப்பட மிரட்டி - சுருள்
வாது செய்கோர் கரு(ங்) — காணமயக்கிட
தேனமொழி மாதர்கள் — இன்னொத்தயங்கிட (மதிமுக)

செப்பு கடைகமென்ன — சேலைப்பளபளென்ன
தங்கவொட்டியாண மும் — தன்னைடை கொலுசுமாட - சுருள்
தத்திமிதிமியென — மத்தளநாளமும்
சகத்தான வளையல்கள் — கணசத்தமொலித்திட (மதிமுக)

நவமாலையு மணிவீசும் — பலபணிகள்
தேசமெதசமதிக்கு — மாசில்லாவொளிவீச - சுருள்
சித்திரவர்மனும் — பெற்றிடு தாயகி
பத்தினிதந்தையின் — பாதக்கைப்போற்றிட (மதிமுக)

பன்னீர்புனுகுவீச — பார்த்தோர்கள் விழிகள் கூச
கன்னியரிருபுரம் — கவரிகள் வீசிட (சுருள்)
சித்தவர்சித்தமும் — மெத்தமயக்கிட
உத்தமனாகிய — சித்திரவர்மன் முன் (மதிமுக)

சிமந்தினி


சித்திரவர்மராசன் கொலு

சிமந்தினி கவி.

ஐயனேயென்னையீன்ற அப்பனேபோற்றிபோற்றி
செய்யசீமணியேயுந்தன் திருவடியடியாள்போற்றி
கையினிற்வாளுமேந்தி காவினியாளும்வேந்தே
வையுவரின்னதென்று கவிலுவீர்கவிலுவீரே.

வ-ம். ஆ ஆ சரணஞ் சரணமையா சுவாமி யெனது தந்தையே தேவரீருடைய மனம்வாடி இலேசமுடனிருக்கும் விதம் யின்னதென் அவிபரமாகத் தெரியப்படச் சொல்ல வேண்டுமையா சுவாமி தந்தையே.

இராசன் கவி.

அன்னமேதலத்துதித்த வழகுசீமந்தினிதாயே
பொன்மணிமாலைசூடி பூமியில்வாழ்வாயம்மா
நன்னயநூலசாஸ்த்ர நலமுள்ளமறையோர்சொன்ன
வன்னமாமொழியைக்கேட்டு வாடினேன்வாடினேனே.

வ-ம். ஆ ஆ வாருமம்மா யெனது தவப்புதல்வியாகிய சிமந்தினியே நீமகாசுபம்பொருந்தி வாழ்ந்திருப்பாய் யென்மனதில் கவலையேதெனில்சோதிடநிபுணராகிய மறையவன்சொன்னவார்த்தையால்நான்மனம்வாடி யிருக்கின்றேனம்மா.

சிமந்தினி-வசனம்.

ஆ ஆ கேளுமையா தந்தையே உமக்கு சோதிட சாஸ்திரிகள் யென்னவசனமுரைத்தார் அதனால் நீரிப்படி ஆயாசப்படுகிறதினால் என்னவிடுமோ உலகம்பழித்திடாதோ விபரமாகத்தானேசொல்ல வேண்டும் யெனது தந்தையே.

இராசன்-வசனம்.

கேளுமம்மா தாயே அந்தவார்த்தையை சொல்ல யென்னுடைய நாவானது குளருகின்றது நானெப்படி சொல்வேனம்மா தாயே.

சிமந்தினி-கந்தார்த்தம்.

சிந்தையுமிகவேவாடி திகைத்திடவேண்டாமையா
வந்தவர்சாஸ்திரிசொன்ன வார்த்தையுமின்னதென்று
புந்தியிலய்யம்நீங்கி புத்திரி தனக்கிரங்கி
சந்தேகமாவெயந்த சங்கதிதெரிவிப்பீரே.

தரு.

சங்கதிதனையுரைப்பீர் சோதிடர்சொல்லசங்கதிதனையுரைப்பீர்
மங்களமாகவே மானகராண்டிடுமுங்கள்
மனங்கலங்கவுரைத்திடும் விபரந்தனையருள்
உத்தமரேயென் சித்தமகிழ்ந்திட
வித்தகராகிய வேதியருரைத்திட (சங்கதி)

வசனம். கேளுமென்தங்கையே நீர்சிந்தையிற்கவலைகொள்ளாமல் விபரமாகச் சொல்லி வாருமையா தந்தையே.

இராசன்-கந்தார்த்தம்.

யென்னமாயுரைப்பேனம்மா யென்மனங்கலங்குதடிபேதாய்
பொன்னிகர்மாலைசூட்டி புதல்விநீவாழும்நாளில்
சின்னமாய்ப்பதினாலாண்டிற் பிரிந்துமங்கிலியம்போக
சொன்னதோர்வார்த்தைகேட்டு சோகமுமாகினேனே

தரு. சோக்கமுமானேனம்மா நானென்னசெய்வேன்
சோக்கமு மானேனம்மா
சோக்கமுமாகினேனம்மா சதிமுடிவைக்கேட்டு
யேக்கமாயிருக்கின்றேன் என்செய்வேனம்மனையருள்
யிப்படிசோதிடரெப்படி துயரசொற்கற்பிக்கும்
கேட்டுமெகலிவிழி யிதுவென்று (சோக்கமு)

வசனம். கேளுமம்மா தாயே நீயாறுவல் மாங்கலியிட்டுவாழும் நாளில் பதினாலாம்வயதில் மங்கிலியமிழக்கும் போமென்று சோதிடர்சொல்லதைக்கேட்டு மனங்கலங்கி வாடியிருக்கிறேன் யிதற்கென்செய்வேனம்மா தாயே.

சீமந்தினி புலம்பல் தரு.

யென்னசெய்வேனென்று செய்வேனே
யிந்தநீவினைவரச் செய்தவே
அவமதிவிதிவசமோ னுன் றெருவேனசெய்வேனே
முன்னுன் விதிவியதுவோ முற்பட்டவிதியெந்தனக்குமிதும்
யிக்கதியதுவிக்க காலைக்கனைவெட்டினேனே
போகும்வழியில் முள்களையடைத்தேனே
பேழையடமேதைக்கொ யாவிடம்பாகபேசினேனே
கலிகளைக்குமாதமிதவேனுன் குரைமாக்காலலைந்திருந்தேனோ
தாலியையுடைசிறுபிர்மன் தலையிலெழுதினனோ

மன்னவன்தனக்குகலம் நானுமருவும்பருத்தியினில்
கனைவனைமடியச்செய்யும் கருவநான்உருவானேனோ
தந்தைதாய்மனமவாடபாவி தரணிதனில்யென்உதித்தேன்
யிசன்வித்தவமகனைவருக்கு யிகழ்ந்ததோதானனுலே
காதினியில்பெண்பாவிநான் கன்னியிருக்கிறதேனு(சிவா)

பொது-வசனம்.

அதேகரிதப்படியென்றால் இராஜகுமரிசீமந்தினி அதிகவருத்தப்பட்டு புலம்பியழுது மூர்ச்சையாய் கிடந்தும் மருபடி சோகந்தெளிந்தெழுந்து தமதுதோழியைக் கூட்டிக்கொண்டு பரமசிவதரிசனசெய்து வென்றெண்ணி அந்தப்பட்டணத்திற்கு அருகாமையிலிருக்கும் யாக்கியவர்க்க மகாரிஷியின் பூங்காவனத்தின் வளப்பங்களைப்பார்த்துமனக்கவலைமாரும்படிக்கு வருகிறசமயத்தில் யாக்கியவர்க்கமுனிவர் பத்தினியாகிய மயித்திரையானவள் தடாகம்சென்று ஸ்நானம் செய்தமுடித்துக்கொண்டு கையிற்கமண்டல நீரெடுத்து வருகிறவிதங்காண்க.

மயித்திரை-கவி.

புண்ணியதீர்த்தமாடி பூசையுமுடித்துக்கொண்டு
வண்ணமாய்க்கமண்டலத்தில் வாவியிலீரெடுத்து
யென்னவியஞ்செழுக்கையோதி யிசனார்பாதத்தைக்கோரி
மன்னசையாமல்மெள்ள மயித்திரையம்மன்வாராள்.

மயித்திரை-தரு.

வந்தாள்ரிஷிபத்தினி மயித்திரைவராள்ரிஷிபத்தினி
சொந்தமுஞ்சீமந்தினி முதல்விழிகூடிட
விந்தையாய்ச்சபைநாடி வேடிக்கையாகவே (வந்தா)
சந்தணப்புமலர்க்கந் களபம்வீச
வந்தனம்புரிந்தோர்க்கு வரமளித்தருள்தர(வந்தா)
மல்லிகைமுல்லை மணமுங்கமகமென
செல்வியசீர்மதைதை சேரவேவழிநாடி(வந்தா)
சிந்தைமிகமகிழ்ந் சீமந்தினிமுன்பு
வுச்சிதமாகவே ஓம்அரகராவென்றும்(வந்தா)

சீமந்தினி-கவி.

அம்மையேயுனதுபாதமடியவள்போற்றிபோற்றி
யிம்மையிலெனக்குவந்த விடர்களுக்கென்னசெய்வேன்

மும்மையாலுளவையாளு முக்கண்ணர்தேவியாக
நன்மையாய்த்தம்பணிந்தேன் நல்வரமருள்வாயம்மா.

வ-ம். சரணம் சரணம்மா தாயே தேவரீரையடியாள் உமை வளாகப்பாவனைசெய்தே னுமது பாதார விந்தங்களுக்கு வந்தனம் வந்தனம்மா.

சீமந்தினி. மயித்திரை.

மயித்திரை கவி.

வந்தனஞ்செய்தாயின்று மாதேநீவாழிவாழி
எந்தவூருனதூரமை யீன்றவர்பேருமென்ன
சிந்தையுமிகுவேவாடுஞ் செப்பிடுமின்னதென்று
சந்தோஷமுடனெனக்கு உன்சங்கதியறிவிப்பாயே.

வ-ம். வாருமம்மா கன்னிகையே நீடூழிகாலம் மகா செல்வச் த்துடன் வாழ்ந்திருப்பாய் நீயார் யுன் தாயார் தகப்பன்யார் ஆகிலு ம்உமது நாடெந்தநாடு நீமனம்வாடித் துயரப்படுவதென்னகாரண ம்யெனக்கு விபரமாகச்சொல்லி வாடியம்மா.

சீமந்தினி அகவல்.

அம்மையேகேளுமடியவள்வார்த்தை
செம்மையாமாரியதேசத்தையாளுஞ்
சித்திரவர்மன்செய்தவத்துதித்த
புத்திரியாகுமுன்பொற்பாதம்போற்றி
ஆமினிகேளுமடியாள்நாமஞ்
சீமந்தினியான்சீருடன்பிறக்க
சோதிடர்தன்னையென்றுதகப்பனுமழைத்து
நீதியாதாலினியெல்லாயுங்கேட்டு

அப்பவேசோதிடர்களாராய்ந்துபார்த்து
மிப்புவிதன்னிலீரேழாண்டில்
செப்புவேன்கேளுஞ் சீமந்தினிக்கு
தப்பிதம்வருமென் றுசாற்றினர்மறையோர்
யெப்படியென் றுயெந்தந்தைகேட்க
அப்பவேபதிலதர்க்கையருமுறைத்தார்
பதினலாண்டிற்பைங்கொடியாட்குச்
சதியாய்மாங்கிலியநாசம்போகுமென்றுர்
அவ்வுரைகேட்டுயென்னையுந்தந்தை
இவ்விதியோவெனவேங்கியும்விழுந்தார்
அடியாள்கேட்டுவெகுமனந்தழுது
முடியாதிவ்விதிமுண்டதோவென்று
அப்பாதிவிட்டுகொண்டவியிர்ச்செல்ல
இப்பவேயுந்தனிணையடிகண்டேன்
மாதேவியாரேமங்கிலியமிகைத்த
பேரதவேயருளுமுன்பொன்னடிபோற்றி
போற்றிப்போற்றிப்புண்ணியவதியே
யேற்றவரங்களெனக்குரைசெய்வாய்
யுன்னையுந்தந்தையாருயிர்துணைவி
தன்னையல்லாமலொருதுணைக்காணேன்

மயித்திரை-திபிதை.

மங்கிலியம்போமென்று மாதேநீசஞ்சலம்வேண்டாம்
பொங்கமாமனமகிழ்ந்து பூவையேசொல்லக்கேளு
செங்கையில்மழுமானேந்துஞ் சிவனடிபோற்றும்வண்ணம்
யிந்தொருவிரதமுண்டு யெடுத்துரைசெய்வேனம்மா.

வ-ம். வாருமம்மா ராசஸ்திரியே யுன்மனதில்யாதொரு களங் கமும் கொள்ளவேண்டாம் மான்மழுவுல கபாலமேந்தும் பரமசிவ த்தின் பாதாரவிந்தத்தை பூசிக்கும்படியான விரதமொன்றிருக்கின் றது அதையருளிச்செய்குரேன் வாருமம்மா கன்னியே.

சீமந்தினி-வசனம்.

ஆனால் விரதத்தின் விபரமென்னவென்று திருவுளம்பற்றியருளி செய்யவேணுமம்மணி.

மயித்திரைக்கும்-சீமந்தினிக்கும்-தர்க்கம்.

மயித்திரை-தரு.

சித்திரவர்மன்புத்திரி சீமந்தினியேமாதே
பத்தியாய்விரதமதை பைங்கொடியேநீகேளாய்

சிமந்தினி தரு.

அன்பானவிரதமதை யருள்செய்யவேண்டுமம்மா
யின்பமாயனுஷ்டிப்பேனே யிப்பதினிற்சொன்னதானே

மயித்திரை தரு.

சோமவாரந்தனிலே சுத்தியாய்நீருடி
சோமமாய்சிவபூசைநீ செய்வையோசொல்லுங்கன்னி

சிமந்தினி தரு.

விரதமதையனுஷ்டிக்கும் விபரமென்னபடியென்று
நிறமுடனேயருள்புரியுந் தேவியெந்தனுக்கு

மயித்திரை தரு.

சொன்னபடிநீசெய்ய சுகமுடனேஉனைமாலை
கன்னியமாய்சூட்டவரும் திருபுனுக்கமாலன்

சிமந்தினி தரு.

அம்மணிநீசொன்னதுபோல்லென் அரசனும்மிருக்கவேணும்
செம்மையுடன்விரதமதை செய்குவேன்மயிலேபரியே

சிமந்தினி-வசனம்.

கேளுமம்மா தாயே மயித்திரையே யிந்தவிரதம் செய்து காவலென்கணவர் யென்றும் சுகமாக யென்னுடனேகூடியிருக்கிறது மெய்யானால் அதற்கு நடத்தவேண்டிய அபிஷேகமின்னதென்று சொல்லுமம்மணி.

மயித்திரை அகவல்.

கன்னியேகேளும்கார்த்திகைமாதந்
தொன்னனல்விரதஞ்சோமவாரத்திற்
காலையிலெழுந்துகங்கையில்ராடி
மேலாந்திருநீற்மேன்மையோடணிந்து
சிவாலயத்திர்ச்சிரத்தைதகளுடனே
நவாபிஷேகம்நடத்துமோர்விபரம்
யெள்ளின்யெண்ணெயினியவாசனைகள்
கள்ளமில்லாமல்சிக்காய்கஸ்தூரியுடனே
பக்கின்தயிர்பால்பஞ்சாமிர்தம்
கன்னலிளநீர்க்கனிபெருமிச்சைநீர்
பன்னீருடனேபலவபிஷேகம்
கன்னியுடனேநாயகர்தனக்கும்

உமாதேவியர்க்குமொழுங்குடன்செய்து
ஆடையாபரணமலங்கிரதமுடனே
வாடைகள்வீசமலர்களுஞ்சூடி
முப்பழநெய்த்தேன்சர்க்கரையுடனே
அப்பனுக்கன்பாயமுதகள்படைத்துதேங்காயுடனே
சீப்பிடிக்கதலிபாங்காய்வெள்ளிலைத்திலைபாக்குமேவைத்து
சாம்பிராணிதூபதீபஞ்சதிராய்க்காட்டி
கற்பூரநீராஞ்சனமுமேயெடுத்து
அடுக்கடுக்கானஆலாத்தியெத்தி
இருக்கவுந்திருவையாமருள்வார்
ஆயிரத்தெட்டுஅர்ச்சனைவில்வம்
சேயிழையாரேசெய்திடவேணும்
அப்படியானபிஷேகபூசை
தப்பிதமின்றிதையலேசெய்து
அஞ்செழுத்தென்றுமாதாரமான
பஞ்சாக்ஷரத்தைபத்தியாய்செய்து
அதிதிகட்கன்னமன்பாயளித்து
பத்தியமயிருக்கபரக்கிரம்பெருவாய்
யிப்படியாகயிசனைப்பணிய
தப்பிதமில்லைதையலேகேளும்
பொங்கமாவிந்தபூசனைசெய்யும்
மங்கையெந்துடனேமகிழ்ந்துவாழ்குவையே.

சிமந்தினி தரு.

ஆனந்தமடைந்தேனம்மா பூனையடுத்துதுயர்கெடுத்து
மிகமருத்துவமுள்ளவிப்த யாவிரதமெடுத்து (ஆனந்த)

ஞானத்துவமுயர்ந்த குருயங்களிச்சிறந்த
மோனமதானசோமவார விரதம்பெற்று (ஆனந்த)

கண்களிகூர்ந்தேதேனையுனைக் கண்டுதுயர்விண்டு
மிக்கமண்டலேல்லவரிட யாவிரதமெடுத்து (கண்களி)

பெண்சொன்னமெடுத்து பேதைமனந்தளர்ந்து
பண்டுசெய்தவினையுன்பாதம் காணக்கடந்து (கண்களி)

வ-ம். சரணஞ் சரணமம்மா தாயே தேவரீருடையபாதாரவிந்தத்தைக்கண்டு மகாமேன்மையுடைய சோமவாரவிரதமும் பெற்

தேன்மெனக்குவந்த பெத்தகமெல்லாம் அறந்தேனின்று அர
யாள் அனந்தமுதிமேறன் பெசதாய்தகப்பனிருக்கும் பெதான்தான
ம்பேர் வருமிறேனம்மா தாயே.

ம-வம். அப்படியேபோய் மகாகயகத்த் பொருந்தி வாழ்ந்திருமம்மா
சீமந்தினி.

பொது-வசனம்.

இந்தப் பிரகாரமாக சீமந்தினி சித்திபத்தினி யிடத்தில் விடை
பெற்று தமதுபட்டணம் வந்து தாய்தந்தைகளைப்பணிந்து நடந்தச
ங்கதிகளைத் தெரியப்படச்சொன்னவுடன் சித்திரவர்மராசனும் சந்
தோஷமுற்று மந்திரிமாருடன் சொல்லுகிற விதங்காண்க.

சித்திரவர்மன்-கவி.

மந்திரிமாரேயிந்த மண்டலத்தரசர்க்கெல்லாந்
சந்தப்புதல்வியர்க்குச் சுயம்வரமென்றுசேதி
விந்தையாய்திருமுகங்கள் வேவுகார்வசமதாக
அந்தந்தவரசருக்கு மிவித்துவரச்செய்வாயே.

வ-ம் வாருங்கள் மந்திரிமார்களே நம்முடைய செல்லப்புத்தி
ரியாகிய சீமந்தினிக்குப் பருவகாலமானபடியால் திருமணஞ்செ
ய்விக்கவேண்டுமானதால் 56-தேசத்து ராசர்களுக்கும் சுயம்வரத்தி
ருமுகமெழுதி தூதர்கையிற் அனுப்பிவையுமப்பா மந்திரி.

மந்-வ அப்படியே செய்கிறேன் மகாராசனே அடா கட்டியக்காரனே
நமதுபட்டணவீதியெல்லாம் பந்தல்போட்டுவிட்டு மகரத்தோரணங்க
ட்டும்படியாக பறைசாற்றி வாரும் கட்டியனே.

கட்டியன் தரு.

திடுக்கிட்டுந்திடுக்கிட்டும் போடுங்கோள்
நல்லதிட்டமுடனே செய்துவையுங்கோள்
வெள்ளிவாழைக்கமுகு கட்டுங்கோள்
யிந்தவீதியையலங்காரந் செய்யுங்கோள்
பந்தல்விரிவாகப் போடுங்கள்
நல்லபட்டங்கள் நிலைக்கண்ணாடி கட்டுங்கோள்
பூரணகும்பமும் வையுங்கோள்
நல்லபொன்மணிபீடமு மெத்துங்கோள்
வாரணிந்திடுமந்த சீமந்தினிக்குசோபனம்பாடுங்கோள்
வந்துமேயாவரும் கூடுங்கோள்
நல்வாழ்த்திரோ சோபனம்பாடுங்கோள்

பொது-வசனம்.

அதோ தெப்படி யென்றால் ஆரியதேசத்தில் சித்திரவர்மன்பட்
டணமென்று மலங்கரித்துசுயம்வரவோலையனுப்பிவிதிருக்கும்போ
து யாதொரு நிடதபுரி பட்டணத்தை யாளாநின்ற நளச்சக்கிரவ
ர்த்தியாரியரானதமயந்தியின் குமாரனாகிய யிந்திரசேனமகாராச
ன் கொலுவுக்கு வருகிறவிதங்காண்க.

இந்திரசேனன்-கவி.

இந்திரசேனராச னின்பமாய்க்கொலுவைநாடி
மந்திரிமார்களோடு மகாகனகுடையிலங்க
தந்தியாழ்நாதமிஞ்ச தவில்முரசதிரவாரொர்
வந்துமேவாழ்த்தமன்னன் மகாசபைக்குவருகின்றானே.

இந்திரசேனன் தரு.

ராசாதிராசன்வந்தான் இந்திரசேனன்
ராசமார்த்தண்டன் வந்தான்
தேசத்தோரெல்லாந் திரைகொண்டுவணங்கிட
வசமாயிருபுற மந்திரியுடைசூழ (ராசா)
சிரசில்மகுடமின்னவே யிருதோள்களில்
சித்திரபுஜங் துன்னவே
வரிசைப்புலவோர்பாட மண்டலத்தோருங்கூட
விரசாய்க்கொலுவைநாடி வீரசூரதீர (ராசா)
காவலர்போற்றிடவே யிருபுறமுங்
கவிவாணர் வாழ்த்திடவே
யெவ்லாரிகளெல்லா மெதிரின்று துதித்திட
யிரவன்னதிரத்தில் கடுவில்சந்திரன்போலே (ராசா)

கவி.

மந்திரிமாரேயிந்த மாநகர்மழைபொழிந்து
விந்தையாய்பயிர்தழைத்து விளைவுகள்மிகுதியாகி
செந்திருவாசமாகச் செழிப்புடனேவருந்தான்
சந்தோஷமடைகின்றார சகலிலுவரசெய்வீரோ.

வ-ம். வாருமப்பா யென்னுட மந்திரிமார்களே நமதுபட்டணத்
தில் மாதமும்மாரிபெய்து விளைவுவேளாண்மை யெல்லாமிகுதியா
யச்சனங்களெல்லாருங்குறைவில்லா மலிருக்கின்றார்களா அறைவில்லா

மல்ஆலயங்களெல்லாம் ஆறுகாலபூசைகளன்னைவேத்தியம்தேரதி ருவிழாமுதலான கைங்கிரியமெல்லாஞ்செம்மையாய்நடந்துவருகிற தோசொல்லும்பிள்ளாய் மந்திரி.

மந்திரி-வசனம்.

சரணஞ்சரணமையா சுவாமி நமதுபட்டணத்திற் மாதமும் மாரிபெய்து விளைவுமிகுதியாய் சகலரும் சுகமாயிருப்ப தன்றியில் தேவாலயப்பூசைகளும் சரியாக நடந்து வருகிறதையா சுவாமி.

பொது-வசனம்.

அகோதெப்படி யென்றால்யிந்தப்பிரகாரமாக சித்திரவர்மமகாரா சன்கொடுத்த சுயம்வரவோலை தூதவர்க ளெடுத்துக் கொண்டு 56-தேசத்திலும் சுத்திக்காட்டி விட்டு நிடதபுரம் வருகிற விதங் காண்க.

தூதர் நொடிச்சிந்து.

வந்தான் தூதனிதோ நல்லவாய் வேகமாகவே நிடதபுரி-இந் திரசேனனிட சபைதனில்-யாவருங்கண்டுமயங்கிடவே ஆரியதேசாதி பதியெங்கள்-அரசனுமே சித்திரவர்மரவர் கோரியே தவம்புரிந்து பெற்ற-கொம்பனையாமந்த சீமந்தினி மங்கைபருவமுமாகியிப்போ மணமதுசெய்யவே மனமகிழ்ந்து பெரங்கமுடன்வரு மன்னர்ஓமு பதிக்குந்திருமுகமெடுத்தே அங்கங்கரிவித்தோம் வரவர-மாரியதே சமே பயணமுற்றோர் செங்கைத்தனுவுடைய மன்னா-திருமுகமளித் தேன் தெண்டனிட்டேன். தந்தனமதந்தனம்.

வ-ம். சரணஞ் சரணமையா சுவாமி யிதோ திருமுகத்திருக்கிரு முகம்வைத்திருக்கின்றேன் அதைப்பார்வையிட்டு எங்களையனுப்பு மையா மகாராசனே.

இந்திரசேனன் கவி.

அருகினிலமர்ந்திருக்கும் அர்க்காருமாரேகேளாய்
விரைவினிலோடியந்த விற்சாதப்பிரியனை
சர்சசல்லாபவோல சந்திராங்கதனையிப்போ
அரண்மனைக்கேகிநீங்கள் அழைத்துமேவருகுவாயே

வ-ம். கேளுமப்பா அர்க்காருமாரகனே நீங்கள் அரண்மனைக் கேகியென் குமாரனான சந்திராங்கதனை நாம் அழைத்துவரச்சொன்ன அதிசீக்கிரத்தில் அழைத்து வாருமப்பா அர்க்காருமாரகனே.

பொது-வசனம்.

இந்தப்பிரகாரமாக யிந்திரசேனன் குமாரனாகிய சந்திராங்கத ன்கொலுவுக்கு வருகிற விதங்காண்க.

சந்திராங்கதன்-திபிதை.

பட்டையம்பரிசுபாலா பாங்குள்ள சூரிகைவாளும்
கட்டிசல்லடமுங்கட்டி சரிகைவேட்டி கரும்பூண்டு
துஷ்டரையடக்கும்வேந்தன் சூரன்சந்திராங்கதான்
யிஷ்டமாய்த்தந்தைமுன்பு யின்பமாய்வருகின்றானே

சந்திராங்கதன்-தரு.

வந்தான்சந்திராங்கதன்	தந்தையர்முன்னே
வாரான்	சந்திராங்கதன்
வந்தான்சந்திராங்கதன்	வாரான்சபைமுன்பாக (வந்
யிந்திராதிதேவர்	வாழ்த்தயெங்கும்
யெங்குமபுகழ்ந்து	போற்ற
ராத்திமத்தளதாளந்	தத்திமிதிமியென
சுத்திலுமாதர்கள்	சோபனம்பாடிட
(சுருள்) சுந்திரத்துடன்	விந்தையதாகவே
மந்திரிகளும்வந்து	போற்றிட (வந்தான்)
நெத்தியில்திலர்தமின்ன	நீலவிழியுருட்டி
சத்தங்கலகலென்ன	தந்தையின்பாதத்தில்
(சுருள்) தண்டைவெண்டையங்	கிண்கிணியுடனட
வாழ்த்திடவரசர்	போற்றிட (வந்தான்)
யெட்டுத்திசையினோடு	மிவன்மதனென்றுகூறப்
பட்டுபளபளென	பணிக்ளலங்கரித்து
(சுருள்) பாவலர்புகழ்	பாடிநின்றிட
காவலர்களுங்கண்டு	போற்றிட (வந்தான்)

சந்திராங்கதன் கவி.

தந்தையேயென்னையீன்ற தாதையேபாதம்போற்றி
வந்தனம்புரிந்தேனென்னை மகாசபைதன்னிலிப்போ
விந்தையாயழைத்தசேதி விபரமாயடியேனுக்கு
சிந்தையுமகிழவே தான் செப்புவீர்செப்புவீரே.

வ-ம். சரணஞ் சரணமையா தந்தையே அடியேனைச்சபைக்கு அழைத்தகாரியமென்னதென்று தெரியப்படச்சொல்லவேண்டு மையா தந்தையே.

இந்திரசேனன்-கவி.

சீர்பெருமாரியதேசஞ் சித்திரவர்மராசன்
பேர்பெருமபுதல்வியான பெண்கொடிசீமந்தினிக்கு
சேர்யோமனமாமென்று திருப்பூரும்வந்ததிப்போ
கார்சூழ்கலியாணத்தைக் கண்டுநீவருவாயப்பா.

வ-ம். வாருமப்பா யென்னுடைய செல்வக்குமாரனாகிய சந்திராங்கதனே நீயானால் மகாசுபக்ஷயம் பொருந்தி வாழ்ந்திருப்பாயாகு ரியதேசாதிபதியாகிய சித்திரவர்மராசன் தவம்புத்திரியாகிய சீமந்தினிக்கு சுயம்வரமென்று திருப்பம் வந்திருக்கின்றது நீ தானிதமுடன் போய்சுயம்வர மாலையாருக்கு கிடைக்குமோ தெரியாது நீயும்போ ய்பார்த்து வாருமப்பா கண்மணியே.

பொது-வசனம்.

அதெப்படியென்றால் யிந்தப்பிரகாரமாக சந்திராங்கதமகாராசனவன் தந்தையாகிய இந்திரசேன மகாராசனிடத்தில் விடைபெற்று ஆரியதேசம் வருகிறவிதங்காண்க.



சந்திராங்கதன் தரு.

தேரேறிநடந்தானே சந்திராங்கதன்
தேரேறி நடந்தானே
தேரேறிநடந்தானே பாரெங்கும்புகழ்ந்திட
வாரேறுந்தனத்தானே மாலையுஞ்சூட்டிட (தேரேறி)

கொடிமன்னர்புடைசூழ வடிபடபேரிகை
வடிவர்யிருபுரமும் மாதர்கவரிவீச
(சுருள்)மாங்குவல்லியந் குரிகைவாளுடன்
யேகபோக வெல்லாசமாகவே (தேரேறி)
கொடியனுகங்களெல்லாம் குப்பென்விஷங்கள்கக்க
அடிவானத்திடிபோல வதிர்தம்நடக்க
(சுருள்)ஆவலாகவே தாவிட்டபரி
பூஜம்பரிமள மேவிவிடும்படி (தேரேறி)
காடுசெடிகளெல்லாம் கதிர்ச்சிதறியோடி
நாடுநகரங்களை நடத்தியதட்டிக்கொண்டு
(சுருள்)ராசதீரனுல்லாச மாகவே
தேசமன்னவர் சிந்தைவாடவே (தேரேறி)

பொது-வசனம்.

அங்கே யெப்படியென்றால் ஆரியதேசத்தில் அன்பத்தாறுதேசத்தரசரும் நிட்டபுரி சந்திராங்கதனும்வந்தவுடன் சித்திரவர்மன்பல்லரையு முபசரித்துச் சொல்லுகிற விதங்காண்க.

சித்திரவர்மன் அகவல்.

மண்டலமாளு மன்னர்மன்னவரே
தண்கவிகூர்ந்தென் கருத்தினைக்கேளும்
சிந்தமகிழ்ந்தியென்தேவியுநானும்
பந்தியாய்பரமன் பாதமேபோற்றி
பெற்றநற்புத்திரி பெருஞ்சீமந்தினிக்கு
கற்பினிற்சிறந்த கன்னியானையான்
கன்னிகையற்று கலியாணஞ்செய்ய
மன்னவரேயுமக்கு மணமறிவித்தேன்
சந்தோஷமுடனே சகலரும்வந்தீர்
வந்தனமையா வார்த்தையொன்றுண்டு
நயமுடன்கேளும் நங்கையென்புத்திரி
சுயம்வரமாலை சுத்தியபோது
மன்னவரெவர்க்கு மாலையும்விழுமோ
பின்னைசந்தனிலே யாவருமிருந்து
கலியாணத்தை கண்களிகூர்ந்து
கலியாமனமுடன் சந்தோஷமதாய்
நடத்தியேவாழ்த்தி நல்விருந்துண்டு
